சாட்சிகள் வாக்குமூலம்

பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண். 35/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாரதா மணி (வா.சா.–1) | தொழில் | : | |
| த/பெ., க/பெ. | : | ராமகிருஷ்ணன் | வயது | : | 58 |
| கிராமம் | : | பெதப்பம்பட்டி | இனம் | : | பெண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 07.02.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 3 ஆம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப் பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி நிரூபண வாக்குமூலத்தை 1, 2, 4 முதல் 9 வரையிலான வாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்கிறேன். கடந்த 11.03.2024 ஆம் தேதிய கொடிவழிப் பட்டியல் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 30.09.1987 ஆம் தேதிய பாகப் பிரிவினை ஆவணம் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 29.12.2023 ஆம் தேதிய வாரிசு சான்று கணிணி நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 15.06.2023 ஆம் தேதிய வாரிசு சான்றிதழ் கணிணி நகல் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 01.02.2024 ஆம் தேதிய மனு அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 14.02.2024 ஆம் தேதிய குறிப்பாணை அசல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/– S.கபாலீஸ்வரன்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பழனி